RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025






மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்






சிவகங்கை | மலர்-5 | இதழ்- 89 | ஏப்ரல்.7 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5


# FCRA முதல் மும்மொழிக் கொள்கை வரை: பாஜகவுக்கு முதல்வர் ஸ்டாலின் எழுப்பும் கேள்விகள்

சென்னை: ஏப்.7-

தமிழ்நாட்டுக்கு வரும் ஒன்றிய பாஜக அமைச்சர்களும், பாஜக முதல்வர்களும் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா? "தமிழ் மண்ணில் நின்று, மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம் என்று சொல்லி பரப்புரை செய்யத் தயாரா? கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் FCRA சட்டத்திருத்தத்தை திரும்பப் பெறுவீர்களா?, நிதி ஒதுக்கீட்டில் நீதி கிடைக்குமா? என முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக தேர்தலை ஒட்டி பிரதமர், அமித் ஷா, மத்திய அமைச்சர்கள், பாஜக ஆளும் மாநில முதல்வர்கள் வரை பிரச்சாரத்துக்காக வந்து செல்லும் நிலையில் முதல்வர் ஸ்டாலின் இந்தக் கேள்வியை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தமிழ்நாட்டுக்கு வரும் ஒன்றிய பாஜக அமைச்சர்களும், பாஜக முதல்வர்களும் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா? தமிழ் மண்ணில் நின்று, மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம் என்று சொல்லி பரப்புரை செய்யத் தயாரா?



நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டுக்குத் தருவது எவ்வளவு? பாஜகவால் ஆளப்படும் செல்லக்குழந்தை மாநிலங்களுக்குத் தருவது எவ்வளவு? வெளிப்படையாக அறிவிக்கத் தயாரா?.

கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் FCRA சட்டத்திருத்தத்தை முழுமையாகத் திரும்பப் பெறுவீர்களா அல்லது அடுத்த வாரமே நிறைவேற்றப் போகிறீர்களா?

இவற்றுக்கெல்லாம், பழனிசாமி தனது டெல்லி ஓனர்களிடம் பதில்பெற்றுத் தர முடியுமா? . கண்ணியமற்ற அவதூறுகளை வாந்தி எடுப்பதை விடுத்து, மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினைகளை எப்போதுதான் பேசுவீர்கள்? தமிழ்நாட்டைத் துண்டாட எத்தனை பேர் டெல்லியில் இருந்து படையெடுத்து வந்தாலும், தமிழ்நாடு தலைகுனியாது. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, வெளிநாட்டு நிதி நடைமுறையை கடுமையாக்க வெளிநாட்டு நிதி திருத்த மசோதாவை மத்திய அரசு மக்களவையில் கடந்த மாதம் 25ம் தேதி அறிமுகம் செய்தது. இந்த மசோதாவை மத்திய அரசு முழுமையாக மறு பரிசீலனை செய்ய வேண்டும் என கிறிஸ்துவ அமைப்புகள் கடும் கண்டம் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த மசோதாவில் வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை சட்ட உரிமங்கள் ரத்து செய்யப்படும் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் சிறுபான்மை நிறுவனங்களின் சொத்துகளை கட்டுப்படுத்த அல்லது அவற்றை அகற்ற அரசு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் பிரிவுகள் கவலையளிப்பதாக உள்ளன. இது போன்ற சட்டப்பிரிவுகள் தவறான முன்மாதிரியை ஏற்படுத்தும் மற்றும் நிர்வாக ரீதியான வரம்பு மீறலுக்கு வழிவகுக்கும் என அகில இந்திய கத்தோலிக்க யூனியன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.



## எடப்பாடி தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்தார் பழனிசாமி

சென்னை: ஏப்.7-

அதிமுக பொதுச் செயலாளரும், தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி, சேலம் எடப்பாடி சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட தனது வேட்பு மனுவை இன்று (ஏப் 06) தாக்கல் செய்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரேகட்டமாக ஏப்.23 ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15ம் தேதி வெளியானது. இந்நிலையில், தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது. மனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறுகிறது. இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்.9ம் தேதி வெளியாகிறது.

இதனிடையே, சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று (ஏப் 06) வேட்பு மனு தாக்கல் செய்தார். இவர் 8வது முறையாக எடப்பாடியில் களம் காண்கிறார். அதோடு, மயிலம் தொகுதியில் அதிமுக வேட்பாளர் சி.வி.சண்முகம் உள்ளிட்டோரும் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, "243 தொகுதிகளில் 210 தொகுதிகளில் அதிமுக கூட்டணி வெல்லும். வரும் 15ம் தேதி நடைபெற உள்ள பிரதமர் மோடியின் குமரி பிரச்சாரத்தில் பங்கேற்க உள்ளேன்.

உதயநிதியே சிபிஎஸ்சி பள்ளி நடத்திக் கொண்டிருக்கிறார். அவர்கள் பள்ளி நடத்தினால் என்ன மொழியை வேண்டுமானாலும் அனுமதிப்பார்கள்.

அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அனைத்து திட்டங்களும் தொடரும். எடப்பாடி மக்களின் பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளேன். ஒன்று இரண்டு கோரிக்கைகள் விடுபட்டிருந்தால் அதையும் நிறைவேற்றுவேன். சட்டப்பேரவைத் தேர்தல் நடக்கிறது.

இதில் ஏன் திமுக டெல்லியுடன் போட்டி போட வேண்டும்? திமுக ஆட்சியில் முடக்கி வைக்கப்பட்டுள்ள அதிமுகவின் திட்டங்கள் மீண்டும் கொண்டுவரப்படும். அதிமுக ஆட்சியில் சட்டத்தின் ஆட்சி நடைபெற்றது. திமுக எம்.பி ஆ.ராசா பேசிய ஆடியோ வைரலானது. அது குறித்துதான் நான் கருத்து சொன்னேன். அவரை விட்டுவிட்டு என்மேல் பாய்வதில் என்ன இருக்கிறது. பெரும்பான்மையோடு அதிமுக கூட்டணி தான் ஆட்சி அமைக்கும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வேட்புமனு தாக்கலின் முதல் நாளான (மார்ச் 30) அன்றே கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின், பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய் மனுத் தாக்கல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இன்றுடன் வேட்புமனு தாக்கல் நிறைவடைவதால், பல்வேறு கட்சியினரும் மனு தாக்கலில் மும்முரம் காட்டி வருகின்றனர். சென்னை மயிலாப்பூர் தொகுதியில் பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தர்ராஜன் வேட்புமனு தாக்கல் செய்தார்.

மதுரை மேற்கு தொகுதி அதிமுக வேட்பாளர் செல்லூர் ராஜு அச்சம்பத்தில் உள்ள மேற்கு தாலுகா அலுவலகத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

தருமபுரியில் பாமக வேட்பாளர் சவுமியா அன்புமணி ஆயிரக் கணக்கானோருடன் ஊர்வலமாக சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார்.


**present sale for all over Tamil Nadu**

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது


## "மக்கள் தொகையை கட்டுக்குள் வைத்த மாநிலங்கள் மக்களவை தொகுதிகளை இழக்காது" : பிரதமர் மோடி

புதுடெல்லி: ஏப்.7-

மக்கள் தொகையை கட்டுப்படுத்திய மாநிலங்கள் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை இழக்காது என கேரள மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

எதிர்வரும் 2029 பொதுத் தேர்தலை முன்னிட்டு தொகுதி மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. தற்போது உள்ள 543 மக்களவை தொகுதிகளில் இருந்து 816 என தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல். இருப்பினும் இதில் மக்கள் தொகை கட்டுக்குள் வந்த மாநிலங்களில் மக்கள் பிரதிநிதிகளின் தொகுதி எண்ணிக்கையில் எந்தவித பாதிப்பும் கூடாது என்ற குரலை தென் மாநிலங்களை சேர்ந்த அரசியல் கட்சிகள் எழுப்பி உள்ளன.



இந்நிலையில், கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் கடந்த சனிக்கிழமை அன்று தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார். அப்போது தொகுதி மறுசீரமைப்பு குறித்து பேசினார். "கேரளா, தமிழகம் மற்றும் பிற மாநிலங்கள் மக்கள் தொகை கட்டுப்பாடு சார்ந்த நடவடிக்கையில் சிறந்து விளங்கியுள்ளன. இருப்பினும் சில தனிநபர்கள் தவறான தகவல்களை தெரிவித்து வருகின்றனர். மக்கள் தொகை எண்ணிக்கை குறைந்த காரணத்தால் தங்கள் மாநிலங்களுக்கான மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் என அவர்கள் சொல்லி வருகின்றனர்.

இந்த விவகாரம் சார்ந்து நாடாளுமன்ற கூட்டத்தில் நாங்கள் உறுதி அளிக்க விரும்புகிறோம். அதில் கேரளா, தமிழகம், ஆந்திரா, கோவா, தெலங்கானா என எந்த மாநிலத்திலும் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படாது என தெரிவித்துக் கொள்கிறோம். அனைத்து மாநிலங்களும் பலன் பெறுகின்ற வகையில் தொகுதிகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும்" என பிரதமர் மோடி தெரிவித்தார்.

சித்தராமையா கருத்து: "ஒரு விஷயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். தொகுதி மறுசீரமைப்பின் கீழ் தென் மாநிலங்களின் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா என்பது நமது கேள்வி அல்ல. அந்த இடங்கள் எவ்வாறு அதிகரிக்கப்படும். அதன் மூலம் யார் விகிதாச்சார ரீதியாக பலன் பெறுகிறார்கள் என்பதுதான் நம் கவலை.

ஐந்து தென் மாநிலங்களும் 63 முதல் 66 இடங்களை கூடுதலாக பெறும். அதே நேரத்தில் பாஜக ஆதிக்கம் செலுத்தும் உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா, பிஹார், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட மாநிலங்கள் 128 முதல் 131 இடங்களை கூடுதலாக பெறும். இது தென் மாநிலங்கள் பெறுகின்ற எண்ணிக்கையை காட்டிலும் இரட்டிப்பாகும். இது வெறும் விரிவாக்கம் மட்டுமல்ல. அதனால் கூட்டாட்சி முறை மீது நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் இந்த முயற்சிக்கு எதிராக நிச்சயம் குரல் கொடுப்பார்கள்" என்று கர்நாடக மாநில முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

## திருவையாறு திமுக வேட்பாளர் வெற்றி பெற்றால் அமைச்சராக்க நடவடிக்கை: உதயநிதி வாக்குறுதி

தஞ்சாவூர்: ஏப்.7-

திருவையாறு தொகுதியில் இந்த முறை 60 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றால் திமுக வேட்பாளர் துரை.சந்திரசேகரனை அமைச்சராக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் பிரச்சாரத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாக்குறுதி அளித்துள்ளார்.

தஞ்சையில் திமுக வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், இன்று திருவையாறு தொகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அவர், "தஞ்சாவூர் என்பது திமுகவின் கோட்டை. இந்த மாவட்டத்தில் 10 தொகுதிகள் உள்ளன. இதில் கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் 7 தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெற்றது. இந்த முறை 8 தொகுதிகளில் திமுக கூட்டணி வெல்ல வேண்டும். இந்த மாவட்டத்தில் இருந்து தான் தலைவர் கருணாநிதி எம்எல்ஏவாக இரண்டு முறை தேர்வாகி உள்ளார், அவர் கால் தடம் படாத பகுதியே இல்லை. அந்த அளவுக்கு இந்த மாவட்டத்தில் ஊர் ஊராக சென்று பிரச்சாரம் செய்துள்ளார்.



அதேபோல் தற்போதைய தலைவரும் தன்னை டெல்டா காரன் எனக் கூறி இந்தப் பகுதிக்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்துள்ளார். அந்த பெருமிதத்தோடு நானும் டெல்டாக்காரன் எனக் கூறுவதில் பெருமிதம் கொள்கிறேன். இங்கு கூடியுள்ளவர்களை பார்த்தாலே ஒரு எழுச்சி தெரிகிறது, எனவே திமுக இங்கு வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது.

இங்கு போட்டியிடும் வேட்பாளர் துரை.சந்திரசேகரன் ஐந்து முறை எம்எல்ஏவாக தேர்வாகியுள்ளார். இந்த முறை ஆறாவது முறையாக சிக்ஸர் அடித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும். அவரை 60 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தால் நீங்கள் கேட்பது போல் அவரை அமைச்சராக்க தலைவரிடம் எடுத்துக் கூறுவேன்.

நானும் வேட்பாளராக சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிடுகிறேன், ஆனால் அதை அடிக்கடி மறந்து விடுகிறேன், கடந்த ஒரு வார காலமாக தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து வருகிறேன். நான் போட்டியிடும் தொகுதிக்கு கூட ஒரு முறை தான் சென்றுள்ளேன், தற்போது இந்த தொகுதியில் போட்டியிடும் துரை.சந்திரசேகரனை வெற்றி பெறச் செய்ய வைக்க வேண்டும் என உங்களிடம் வாக்கு கேட்டு வந்துள்ளேன்.

இந்த திருவையாறு தொகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் எம்எல்ஏவாக இருந்த துரை.சந்திரசேகரன் முயற்சியால் பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோல் தற்போது பல கோரிக்கைகளை துரை.சந்திரசேகரன் என்னிடம் வழங்கியுள்ளார், நிச்சயமாக திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றி தரப்படும் .

அதேபோல் தேர்தல் வாக்குறுதியில் கொடுக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் திமுக ஆட்சி அமைந்த உடன் நிறைவேற்றிய தர நடவடிக்கை எடுக்கப்படும். தமிழகத்தின் வளர்ச்சிக்கு மத்திய பாஜக அரசு போதிய நிதியை வழங்க மறுத்து வருகிறது .ஆனால் மீண்டும் இந்தி மொழியை திணிக்க முயற்சிகளை எடுத்து வருகிறது இதற்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஜாடிக்கேத்த மூடி மாதிரி மோடிக்கேத்த அடிமையாக செயல்பட்டு வருகிறார்.

பதவிக்காக நான் யார் காலில் விழும் அனுபவம் எனக்கு கிடையாது, ஆனால் பழனிசாமி பதவிக்காக ஜெயலலிதா, சசிகலா, டிடிவி தினகரன், ஓபிஎஸ் ஆகியோரது காலில் விழுந்து, பின்னர் அவர்களது காலையும் வாரி விட்டவர். தற்போது மோடியின் காலை பிடித்து தொங்கிக் கொண்டிருக்கிறார். தமிழகத்தை ஆள எடப்பாடி பழனிசாமியை பாஜக ஒரு ரிமோட்டாக மாற்றி வருகிறது.

இந்த முறை டெல்லி அணிக்கும் தமிழகத்துக்கும் நடைபெறும் தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டும். அதற்கு இன்னும் 16 நாட்கள் தான் உள்ளன. இதில் ஒவ்வொருவரும் அவரவர் பகுதிக்கு சென்று தங்களிடம் தெரிந்தவரிடம் திமுக கூட்டணிக்கு வாக்கு சேகரித்து திருவையாறு தொகுதியில் துரை.சந்திரசேகரனை வெற்றி பெறச் செய்தால் நீங்கள் கேட்டது போல் அவரை அமைச்சராக்க தலைவரிடம் எடுத்துக் கூறுவேன்" என்று உதயநிதி கூறினார்.



## ஊத்துக்கோட்டையில் NDA கூட்டணி கட்சி சார்பில் கும்முடிபூண்டி தொகுதி அதிமுக வேட்பாளர் V.சுதாகர் அறிமுக கூட்டம்

திருவள்ளூர், ஏப்.7-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஊத்துக்கோட்டை புவனேஷ்வரி தணியார் திருமண மண்டபத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் கும்மிடிப்பூண்டி தொகுதி அதிமுக வேட்பாளர் சுதாகர் அவர்களின் அறிமுக கூட்டம் 05.04.2026 அன்று 8:00 மணியளவில் கிழக்கு மாவட்ட தலைவர் ஷி.சுந்தரம் மாவட்ட துணை தலைவர் ரவி வழிகாட்டுதலின் படி மாவட்ட செயலாளரும் மற்றும் எல்லாபுரம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளருமான யி.சாந்தி மற்றும் தமிழ்இவக்கிய அணி மற்றும் தமிழ்வளர்ச்சி பிரிவு மாவட்ட செயலாளர் தயாளன், கல்வியாளர் பிரிவு வரதராஜன் தொழில் வல்லுனர் பிரிவு மாவட்ட துணைதலைவர் கோதண்டராமன் தொழில்பிரிவு மாவட்டசெயலாளர் சங்கீதா விவசாய அணி மாவட்ட செயலாளர் ஹேமத்திரி தமிழ் இலக்கிய வளர்ச்சிபிரிவு மா.செயலாளர் சேஷாத்திரி முன்னாள் பூண்டி கிழக்கு ஒன்றிய செயல ாளர்கு மரன்கலந்துகொண்டுமாலை மற்றும் சால்வை அணிவித்துவாழ்த்துரை தங்கள் ஆதரவை தெரிவித்தனர்

## மாதவரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம் சோழவரம் தெற்கு ஒன்றியத்தில் தீவிர வாக்கு சேகரிப்பு



மாதவரம், ஏப்.7-

மாதவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனம் சோழவரம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட சோழவரம், ஆங்காடு, பூதூர், பெருங்காவூர், கும்மனூர் ஆகிய ஊராட்சிகளில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் சோழவரம் ஒன்றிய குழு முன்னாள் துணைப் பெருந்தலைவருமான மீ.வே.கருணாகரன் தலைமையில் திறந்த வேனில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். இதில் தேமுதிக மாவட்டச் செயலாளர் டில்லி, காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் காங்கை குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டத் தலைவர் இளங்கோவன் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் முன்னிலையில்

சோழவரம் ஊராட்சியில் விமல், எத்திராஜ் ,காங்கிரஸ் வட்டார தலைவர் வேல்முருகன், நந்தன், ஆங்காடு ஊராட்சி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கிரிஜா நித்தியானந்தம், பெருங்காவூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஸ்வீட்டிகோபி, நந்தா, ராஜா,சந்தானம், முனுசாமி, வேல்முருகன், கமலக்கண்ணன், ஹேமாவதி, மதன், பிரபா, கோதண்டன், கும்மனூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் வேதா, அரசு, மாணவரணி சார்பில் கௌதமன், பிரேம் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் திமுக வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனத்திற்கு பட்டாசு வெடித்து மாலை அணிவித்து மலர்கள் தூவி ஆரத்தி எடுத்து பொன்னாடை போர்த்தி உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.



## அன்பு அறம் செய் அறக்கட்டளை விருது வழங்கும் விழா

கம்பம் ஏப். 07-

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள ஆல் இந்தியா பாரஸ்ட் வெல்பர் ஆர்கணேசன் மையத்தில் அன்பு அறம் செய் அறக்கட்டளை மார்ச் 8 உலக மகளிர் தின தொழில் முனைவோர் கௌரவிப்பு விழா 2026 என்ற தலைப்பில் சுயதொழிலால் முன்னேறிய மகளிரை கௌரவிக்கும் விதமாக விருதுகள் வழங்கி அவர்களின் திறமைகளைப் பற்றி எடுத்துக்கூறி தலைமை சிறப்பு விருந்தினராக வருகை தந்த தலைமை ஆசிரியர் சஞ்சீவி ராணி, முன்னிலை சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சுருளிப்பட்டி சிவாஜி, வனவர் ஜெயகணேஷ்,சதீஷ் குமார், முத்துக்குமார்,சுதாகர், நவநீதி சஞ்ஜீவி,வேல்சரண்,கோகிலா, ஜெயா விருதாளர்களுக்கு விருதுகள் வழங்கினர்.

நிகழ்வில் விருது பெற்ற மகளிரை பற்றிய சிறப்புகளை எடுத்துக்கூறி அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளது பற்றி அன்பு அறம் செய் அறக்கட்டளை நிறுவனர் சுருளிப்பட்டி அன்பு ராஜா எடுத்துக் கூறியது சிறப்பாக அமையப்பெற்றது.

அறக்கட்டளையின் செயல்பாடுகளையும் விருதாளர்கள் சிறப்பாக எடுத்துக் கூறினர். இன்றைய நிகழ்வில் விருது பெற்றவர்களுக்கும், வருகை தந்த பொது மக்களுக்கும் மஞ்சப்பையும், மரக்கன்றுகளும் அறக்கட்டளை சார்பாக வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து மஞ்சப்பையான துணிப்பை மற்றும் மரக்கன்றுகள் நடுவதன் அவசியத்தை பற்றி எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்வில் அனைவரும் ஒன்று கூடி பேசியபோது கூட்டு முயற்சி பெரிய வெற்றி தரும் என்பதை இன்றைய தினம் வருகை தந்த ஒவ்வொருவரின் மனதில் ஆழப் பதியும் வண்ணம் அமைந்தது.

விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் அன்பு அறம் செய் அறக்கட்டளை நிறுவனர் அன்பு ராஜா நன்றி கூறினார்.



## மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் சமாதான அமைதி பிரார்த்தனை கூட்டம்


வாணியம்பாடி : ஏப். 07-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் 4/4/26 முற்பகல் 12 மணிக்கு அளவில் சமாதான அமைதி பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது. கல்லூரி தலைவர் வி.திலீப் குமார் ஜெயின், செயலாளர் ஆனந்த் சிங்வி, கல்லூரி முதல்வர் முனைவர் ம.இன்பவள்ளி முன்னிலையில் ராஷ்டிரிய ஸ்ரீ கமல் முனி கமலேஷ், சேவா பாவா ஸ்ரீ கன்ஷா முனி, கோசல் முனி, அக்ஷித் முனி, சக் ஷம் முனி, ஆகிய குருமார்கள் வருகை புரிந்து கருத்துரையாற்றினர்.

அப்போது பெண்களாகிய நாம் எவ்வாறு முன்னேற வேண்டும் என்றும் அகிலமே பெண்ணின் சக்தி உருவம் எனவே பெண்மையை போற்றி பாதுகாக்க வேண்டும் தாய்மையை மதித்து வணங்க வேண்டும் நம் உரிமை மறுக்கப்படுவது நாமே போராடி பெற்று சமுதாயத்தில் மாற்றத்தை உருவாக்க வேண்டும் அத்துடன் இவ்வுலகில் சமாதானம் நிலவ போரில்லாத அமைதி நிலை ஏற்பட வேண்டும். சாதி பிரிவுகள் மனிதனால் உருவாக்கப்பட்டது கொரோனா கொரோனாவின் போது மனிதநேய முன்னிலைப் படுத்துவது போன்று தனிமனிதனின் பண்புமிகு அவசியமானது, ஆகவே இறைவன் ஒருவனே அத்தகைய இறைவனை வணங்கு வரும் சந்ததியினருக்கு நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கி வழி காட்டுவோம்! ஒன்று கூடி பிரார்த்திப்போம்! என்று கூறினர் இந்நிகழ்வில் 600 க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கு கொண்டு விழிப்புணர்வு பெற்றனர்



■ திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம் வண்ணாங் குப்பம் கிராமத்தில் அதிமுக தலைமையிலான கூட்டணி கட்சியின் கும்முடிபூண்டி தொகுதி அதிமுக வேட்பாளர் வி.சுதாகர் அவர்களை ஆதரித்து கிளை செயலாளர் நாகலிங்கம் தலைமையில் அப்பகுதியில் உள்ள மக்களிடத்தில் துண்டு பிரசுரங்களை கொடுத்து இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்



## பூண்டி கிழக்கு ஒன்றியம் ஊத்துக்கோட்டை பேரூர் பாஜக சார்பில் அதிமுக வேட்பாளர் அறிமுக கூட்டம்

திருவள்ளூர், ஏப்.7-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை காமராஜர் திருமண மண்டபத்தில் 05.04.2026 மாலை 06:00 மணியளவில் தேசியஜனநாயக கூட்டணி கட்சி பூண்டி ஒன்றியம் மற்றும் ஊத்துக்கோட்டை பேரூர் சார்பில் கும்முடிபூண்டி தொகுதி அதிமுக வேட்பாளர் V.சுதாகர் அறிமுக கூட்டம் மாவட்ட தலைவர் S.சுந்தரம் மற்றும் பூண்டி கிழக்கு ஒன்றிய தலைவர் குருதேவ்உதயா பூண்டி ஒன்றிய செயலாளர் B.M.பிரசாத் மற்றும் H.M. வெங்கடரமணா அதிமுக செயலாளர் ஷேக்தாவூத், சித்கிக் ,மோ கன்பாப,V.S.சுகுமார் ஙி.கி.சக்திவேல் கலந்துகொண்டு சால்வை அணிவித்து ஆதரவு திரட்டினார்கள் இக்கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர்



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலகமான சூளகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில், வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யும் படிவங்கள் மற்றும் பாதுகாப்பு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டாட்சியர் ரமேஷ் பாபு உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரகத்தில் 24 மணிநேரமும் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை 55.ஓசூர் மற்றும் 56.தளி தேர்தல் செலவின பார்வையாளர் ராகுல் சிங்கான்யா,ஐ.ஆர்.எஸ், நேரில் பார்வையிட்டு, தொலைபேசி வாயிலாக வருகை தரும் புகார்கள், C-VIGIL APP வாயிலாக வரபெறும் புகார்கள் குறித்த கண்காணிப்பட்டு வரும் விவரங்களை அலுவலர்களிடம் கேட்டறிந்தார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) கிருஷ்ணன், உதவி இயக்குநர் (நில அளவை) ஜெய்கிருஷ்ணன், வட்டாட்சியர் (தேர்தல்) சம்பத்து உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் அதிமுக வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பின்னால் இருந்த விளம்பர பலகையில் பிரதமர் மோடி படம் இல்லாததால் வேட்பாளரிடம் பாஜக கட்சியினர் வாக்குவாதம், வெளிநடப்புஇதனால் டாக்டர் முத்தையா பேசும்போது பாஜக கட்சியினர் மோடி படம் இல்லை என்று வேட்பாளரிடமே வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதில் வேட்பாளர் பேச முடியாமல் தவித்தார்.மோடி படம் இல்லை என்பதால் நோட்டாவிற்கு வாக்களிக்க போவதாக தெரிவித்து வெளியேறினர்.

## அலமாதி ஊராட்சியில் தீவிர வாக்கு சேகரிப்பு



மாதவரம், ஏப். 07-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனம் சோழவரம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அலமாதி ஊராட்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் சோழவரம் ஒன்றிய குழு முன்னாள் துணைப் பெருந்தலைவருமான மீ.வே.கருணாகரன் தலைமையில் அலமாதி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் தமிழ்வாணன் முன்னிலையில் திறந்த வேனில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். வழிநெடுகிலும் பட்டாசு வெடித்து, மாலை அணிவித்து, பெண்கள் ஆரத்தி எடுத்து வாழ்த்தி வரவேற்றனர். இதில் தேமுதிக மாவட்டச் செயலாளர் டில்லி, காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் காங்கை குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டத் தலைவர் இளங்கோவன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் அப்துல்காதர் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் முன்னிலையில் அலமாதி ஊராட்சியில் திமுக நிர்வாகிகள் கலைவாணன், சக்கரவர்த்தி, பழைய அலமாதி குணசேகரன், தியாகராஜன், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் தங்கராஜா, பாலா, மணிகண்டன், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் மோகன்குமார், தினகரன், பார்த்திபன், கடல் செல்வம், கிஷோர்குமார், கோட்டீஸ்வரன், தேமுதிக நிர்வாகிகள் அருணச்சாலம், அனுமந்தன், சீனிவாசன், வெங்கட் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் திமுக வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனத்திற்கு உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் சாந்திராமு குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார்

# மக்களுக்காக 24 மணி நேரமும் பணியாற்றுவேன் தாம்பரம் திமுக வேட்பாளர் டாக்டர் கிருத்திகா தேவி உறுதி

தாம்பரம் ஏப். 07-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் டாக்டர் கிருத்திகா தேவி தனது தேர்தல் களம் மற்றும் வெற்றி வாய்ப்புகள் குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்போது பேசிய அவர்

வேட்புமனுத் தாக்கலின் போது மாநகரச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.ஆர். ராஜா உடன் வந்தது கட்சி நிர்வாகிகளிடையே பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். கடந்த இரண்டு ஆண்டுகளாகவே தேர்தலை முன்னிறுத்தி கட்சிப் பணிகள் தொய்வின்றி நடந்து



வருவதால், களத்தில் மிகுந்த எழுச்சி நிலவுவதாகவும், வெற்றி நிச்சயம் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரு மருத்துவராகத் தன்னைப் பார்ப்பவர்கள், மக்கள் பணியில் எப்படிச் செயல்படுவார் என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில்

மருத்துவர்கள் எப்போதும் 24 மணி நேரமும் மக்களால் அணுகக்கூடிய நிலையில் இருப்பவர்கள். குறிப்பாக மகப்பேறு மருத்துவர் என்பதால் எந்த நேரத்திலும் அழைப்பைப் பெற்று சேவை செய்யப் பழகியவள்.

சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுவதும் எனக்குப் பெரிய வித்தியாசமாகத் தெரியவில்லை. ஏற்கனவே செய்து வரும் மக்கள் சேவையை இப்போது தொகுதி முழுமைக்கும் விரிவுபடுத்தப் போகிறேன்

தற்போது கட்சி நிர்வாகிகளைச் சந்தித்து வரும் நிலையில் வரும் ஏழாம் தேதி முதல் எஸ்.ஆர். ராஜா தலைமையில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளதாக அவர் குறிப்பிட்டார். தற்போதே மக்கள் சில கோரிக்கைகளை முன்வைப்பதாகவும், ஆட்சி அமைந்தவுடன் அவை அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

எஸ்.ஆர். ராஜாவுக்குப் பதிலாகத் தான் போட்டியிடுவது குறித்துப் பேசிய அவர், கட்சி, சின்னம், தலைவர் (தளபதி) இவைதான் இங்கு பிரதானம். மாநகரச் செயலாளரே என்னை முன்னின்று அறிமுகப்படுத்துவதால் எந்த மாற்றமும் இருக்கப்போவதில்லை. கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் கட்சித் தொண்டர்களின் முழு ஆதரவுடன் களம் இறங்குவதால் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது, என்றார் பெண்களின் உணர்வுகளையும், சக மனிதர்களின் வலியையும் ஒரு மருத்துவராகத் தான் நன்கு அறிவேன் என்று குறிப்பிட்ட அவர், கடந்த 25 ஆண்டு கால மருத்துவ சேவையே தனது அர்ப்பணிப்பிற்குச் சாட்சி என்றார். தனது மருத்துவப் பணிக்குச் சிறிய இடைவெளி விட்டு, முழுமையாகத் தொகுதி சேவைக்கு வந்திருப்பதாகவும், மக்கள் தனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.



# தாம்பரம் தொகுதியில் திமுக வேட்பாளர் கிருத்திகா தேவிக்கு தேமுதிக நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு

தாம்பரம் ஏப். 07-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிடும் மருத்துவர் கிருத்திகா தேவி, தேமுதிக நிர்வாகிகளை நேரில் சந்தித்து ஆதரவு கோரிய நிகழ்வு உற்சாகமான சூழலில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, தேமுதிக நிர்வாகிகள் அவருக்கு சால்வை மற்றும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உற்சாக வரவேற்பு அளித்தனர். அதற்கு பதிலளித்த கிருத்திகா தேவி, நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்து, தன்னம்பிக்கையுடன் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சிக்கு தேமுதிக சார்பில் நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு நிகழ்ச்சியை இதில் அரசியல் உறவுகளை வலுப்படுத்தும் விதமாக அமைந்தது.

மேலும் தாம்பரம் சட்டமன்ற தேர்தல் பணிக்குழு உள்ளிட்டோர் மற்றும் பல்வேறு தேமுதிக நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வு, தாம்பரம் தொகுதியில் அரசியல் சூழலை மேலும் சூடுபிடிக்கச் செய்ததுடன், கூட்டணி கட்சிகளின் ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது



■ வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி சாமல் பள்ளத்தில் அதிமுக வேட்பாளர் கே.பி. முனுசாமி இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.





# போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதியில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திமுக சார்பில் வேட்புமனு தாக்கல் செய்தார்

தேனி ஏப்.07-

திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் சமீபத்தில் திமுகவில் இணைந்த தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தேனி மாவட்டம் போடி சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிடுகிறார்.இந்நிலையில் 06.04.26 அன்று மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் வேட்பு மனுதாக்கல் செய்தார். இந்நிகழ்வில் தேனி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான தங்க தமிழ்ச் செல்வன் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஓ.பி ரவிந்திரநாத், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சையது கான்,கூட்டணி கட்சி நிர்வாகிகளான தேனி மாவட்ட காங்கிரஸ் தலைவர் கோபிநாத்,மார்க்சிஸ்ட்



கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ராமச்சந்திரன்,விசிக போடி சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் மதன், தேமுதிக மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்திபோடி மேற்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான லட்சுமணன்,போடி கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன்,போடி நகர செயலாளர் புருஷோத்தமன்,போடி நகர மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர்,தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி ,தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தின சபாபதி,திமுக பிரமுகர்கள் அப்துல் சமது பழனிவேல் ,விமலேஸ்வரன் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தாராபுரத்தில் அஇஅதிமுக வேட்பாளர் சத்தியபாமா வேட்பு மனு தாக்கல்

திருப்பூர், ஏப்.7-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் அஇஅதிமுக வேட்பாளர் திருமதி சத்தியபாமா, வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் ஃபிலிக்ஸ் ராஜாவிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

வேட்பு மனு தாக்கல் செய்யும் முன், அண்ணாநகர் பகுதியில் உள்ள சித்தி விநாயகர் கோவிலில் வேட்பு மனுவை வைத்து சாமி தரிசனம் செய்தார். பின்னர், அமராவதி ரவுண்டானாவில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் பெண்கள் உற்சாகமாக நடனமாடி, ட்ரம் செட் மற்றும் மேள தாளங்களுடன் ஊர்வலமாக புறப்பட்டனர்.

இந்த ஊர்வலம் தாராபுரம் கோட்டாட்சியர் அலுவலகத்தை சென்றடைந்தது. அங்கு தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சத்தியபாமா தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் அஇஅதிமுக புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் சி. மகேந்திரன், பாமக மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் பொன் ருத்ரகுமார், மாநில அம்மா பேரவை இணைச் செயலாளர் முத்து வெங்கடேஷ்ரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# கோரிக்கைகளை உரிமையோடு கேளுங்கள்

பர்கூர், ஏப்.7-

கோரிக்கைகளை உரிமையோடு கேளுங்கள்:திட்டங்கள் தொடர, தி.மு.க. கூட்டணியை ஆதரியுங்கள்மதியழகன் எம்.எல்.ஏ. பிரசாரம்கிருஷ்ணகிரி, ஏப்.07ஞ

உங்களின் கோரிக்கைகளை உரிமையோடு கேளுங்கள் என்றும், திட்டங்கள் தொடர தி.மு.க. கூட்டணியை ஆதரியுங்கள் என்றும் மதியழகன் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

பிரசாரம்கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டி. மதியழகன் எம்.எல்.ஏ. குருவிநாயனப்பள்ளி, சின்னமட்டாரப்பள்ளி, வரட்டனப்பள்ளி, பெலவர்த்தி, பாலேப்பள்ளி, ஒரப்பம் உள்ளிட்ட ஊராட்சிகளுக்கு உட்பட்ட 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் நேற்று தீவிர பிரசாரம் செய்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது:"உரிமையோடு கேளுங்கள்"

தி.மு.க. ஆட்சியில் பர்கூர் தொகுதியில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் எம்.எல்.ஏ.வாக இந்த தொகுதிக்காக பல திட்டங்களை கொண்டு வந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னும் சில கிராமங்களில் சாலை, சாக்கடை கால்வாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தேவையென மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். உங்கள் கோரிக்கைகளை என்னிடம் தெரிவியுங்கள். வரவிருக்கும் தேர்தலில் வெற்றி பெற்று, தி.மு.க.வின் "திராவிட மாடல் 2.0" ஆட்சி மீண்டும் அமைந்ததும் அவை அனைத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்."200 தொகுதிகளில் வெற்றி" உங்களின் தேவைகளை உங்கள் வீட்டுப் பிள்ளை, சகோதரன் என நினைத்து உரிமையோடு என்னிடம் கூறுங்கள். அவற்றை நிறைவேற்ற உறுதி அளிக்கிறேன்.

தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணி 200 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். அதற்காக பொதுமக்கள் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு வழங்க வேண்டும். மேலும், திட்டங்கள் தொடர்ந்து கிடைக்க, மு.க. ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சராக வர வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், ஒன்றிய செயலாளர் வி.ஜி. ராஜேந்திரன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருவையாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு

திருவையாறு ஏப்.7-

: திருவையாறு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் துறை சந்திரசேகரனை 60 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி செய்யுமாறும், தஞ்சை திமுக கோட்டை என்றும் உதயநிதி கூறினார்.

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் துரை சந்திரசேகரனை ஆதரித்து திருவையாறு தேரடி வீதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரித்தார்.

அவர் பேசுகையில்,:

தஞ்சாவூர் மாவட்டம் திமுகவின் கோட்டை என்றும், போன தேர்தலில்



7 தொகுதியில் வெற்றி பெற்றோம். இந்த முறை 8 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்றார்.

மேலும் துரை.சந்திரசேகரன் கடந்த தேர்தலில் 54 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த தேர்தலில் 60 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றால் அவரை அமைச்சராக அறிவிக்க அனைவரிடம் பரிந்துரைப்பேன் என்றும் தெரிவித்தார்.

அவர் ஐந்தாண்டுகளில் திருவையாறு தொகுதியில் பல்வேறு திட்டங்களை செய்துள்ளார். திருவையாறு பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது .

பூதலூர் மற்றும் திருவையாறு பகுதியில் 220 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டு குடிநீர் திட்டம் கொண்டு வந்ததாகவும் என்றும், 192 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவையாறு புறவழி சாலை கொண்டு வந்ததாகவும், 53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்காட்டுப்பள்ளி புறவழிச்சாலை நடைபெற்று வருகிறது, விண்ணமங்கலம் வெண்ணாற்றில் உயர்மட்ட பாலம் கட்டும்பணி நடைபெற்ற வருவதாகவும், செங்கிப்பட்டியில் 300 ஏக்கரில் 120 கோடி ரூபாய் மதிப்பில் சிப்காட் தொழிற்சாலை, புதுக்குடியில் புதிய கால்நடை தீவன தொழிற்சாலை உள்ளிட்ட திட்டங்களை கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் துரை. சந்திரசேகரனை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி செய்ய வேண்டும் என்றும், தற்போதும் தொகுதிக்கு பல்வேறு கோரிக்கைகளை வழங்கியுள்ளார். அதை அவர் அமைச்சராக வந்து நிறைவேற்றுவார் என்றும் தெரிவித்தார்.கூட்டத்தில் கூட்டணி கட்சியைச் சார்ந்த அனைவரும் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை (தனி) சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் நேற்று தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார் உடன் மானாமதுரை காங்கிரஸ் மூத்த தலைவர் ஏர் ஆர் பி முருகேசன்,திமுக சிவகங்கை மாவட்ட துணை செயலாளர் சேங்கை மாறன் , திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் அண்ணா துரை உடனிருந்தனர்.



# மானாமதுரை சட்டமன்ற வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் வேட்புமனு

மானாமதுரை, ஏப்.7-
மானாமதுரை சட்டமன்ற வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் வேட்புமனு தாக்கலுக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய தமிழரசி ரவிக்குமார் கூறியதாவது:"கடந்த ஐந்து ஆண்டுகளில் மானாமதுரை தொகுதியில் அரசு கலைக் கல்லூரி, ஐடிஐ (ITI), மினி ஸ்டேடியம், நாட்டார் கால்வாய் திட்டம், கீழப்பசலை செக்டேம், திருப்புவனத்தில் பத்திரப்பதிவு அலுவலகம், இளையான்குடி தீயணைப்பு நிலையம் எனப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்.

எங்கள் முதலமைச்சர் வெளியிட்ட தேர்தல் அறிக்கை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. குறிப்பாக மகளிருக்கான திட்டங்கள் பெண்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளன. 60 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் திமுக கூட்டணிக்கு வாக்களிக்கத் தயாராக உள்ளனர். கடந்த முறை பெற்ற வெற்றியை விட இந்த முறை கூடுதல் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதி," எனத் தன்னம்பிக்கையுடன் தெரிவித்தார்.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் வேட்பாளர் காளிமுத்து வேட்பு மனுவை தேவகோட்டை சார் ஆட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் அயூஸ் வெங்கட் வட்ஸ் இடம் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்தார்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் சட்டமன்ற தொகுதிதிமுக வேட்பாளர் கே.எம்.ராஜூகுன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார்



■ கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சி காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லக்குமார், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்ட செயலாளர், பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# மானாமதுரை தொகுதியில் 20,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம்: பொன் பாலகணபதி நம்பிக்கை

மானாமதுரை ஏப்.07-
தேசிய ஜனநாயகக் கூட்டணியின் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் பொன் பாலகணபதி, வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

முக்கிய அம்சங்கள்:

* கூட்டணி பலம்: பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சி மற்றும் எடப்பாடியார் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களின் வழிகாட்டுதலோடு இந்தத் தேர்தலைச் சந்திக்கிறோம். அனைத்துக் கட்சிகளுக்கிடையே சிறந்த ஒருங்கிணைப்பு இருப்பதால், மானாமதுரை மீண்டும் எங்களின் கோட்டை என்பது நிரூபிக்கப்படும்.



* வெற்றி வாய்ப்பு: கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதே இந்தத் தொகுதியில் பாஜக கூட்டணி அதிக வாக்குகளைப் பெற்றிருந்தது. தற்போது மக்கள் மத்தியில் எழுந்துள்ள பெரும் ஆதரவை வைத்துப் பார்க்கும்போது, 20,000 க்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் நாங்கள் அமோக வெற்றி பெறுவோம்.

* தொகுதிப் பிரச்சனைகள்: மானாமதுரை தொகுதியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். சிப்காட் பகுதியில் மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுத்து நிறுத்தத் தவறியது, மணல் கொள்ளை மற்றும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு போன்ற பல்வேறு புகார்கள் அவர் மீது உள்ளன.

* வருங்காலத் திட்டங்கள்: நாங்கள் வெற்றி பெற்றவுடன், இளையான்குடி பகுதியில் நிலவும் குடிநீர் மற்றும் சுகாதாரப் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளித்துத் தீர்வு காண்போம். மேலும், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க ஐடி (IT) நிறுவனங்களைக் கொண்டு வரவும், சிப்காட் பகுதியை மேம்படுத்தவும் முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மத்திய அரசின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை மானாமதுரை தொகுதிக்கு நேரடியாகக் கொண்டு வந்து, இந்தத் தொகுதியை ஒரு முன்மாதிரி தொகுதியாக மாற்றுவதே எங்களது இலக்கு என்று அவர் உறுதிபடத் தெரிவித்தார்.




■ சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், கருணாஸ் நேற்று (06.04.2026) தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். அவர், சிவகங்கை தொகுதி தேர்தல் அதிகாரியான அலுவலர் ஜே.பி. கிரேசியாவிடம் நேரில் சென்று மனுவை அளித்தார். இதன்போது ஆதரவாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்வேட்புமனு தாக்கலையொட்டி, அலுவலகம் சுற்றுவட்டாரத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



■ சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, இந்திய குடியரசு கட்சி (அத்வாலே) சார்பில் மானாமதுரை தொகுதி வேட்பாளராக V.தூதை ஆறுமுகம் நேற்று அதிகாரப்பூர்வமாக தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழக மாநிலத் தலைவர் Fr. M.A. சூசை முன்னிலையில் இந்த வேட்புமனு தாக்கல் நடைபெற்றது.B.Com., D.Coop. பட்டம் பெற்றுள்ள ஆறுமுகம், தொகுதி முன்னேற்றம் மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக செயல்படுவேன் என தெரிவித்தார். மேலும், "கரும்பு விவசாயி" சின்னத்தில் வாக்களித்து பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெறச் செய்யுமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், அதிமுகவை சேர்ந்த வெங்கடாபுரம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சத்யராஜ் தலைமையில், சி.கோவிந்தராஜ் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் மற்றும் கிருஷ்ணகிரி மத்திய ஒன்றிய செயலாளர் வி சி என் மகேந்திரன் ஏற்பாட்டில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் தொகுதி வேட்பாளர் மதியழகன் முன்னிலையில் மாற்று கட்சியினர் 50க்கும் மேற்பட்டோர் திமுகவில் இணைந்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம்,வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் கேபி முனுசாமி சூளகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் கீதா ராணி அவர்களிடம் தனது வேட்பு மனுவை அளித்தார். தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் வட்டாட்சியர் ரமேஷ், கிருஷ்ணகிரி அதிமுக வேட்பாளர் அசோக் குமார், மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# மானாமதுரை சட்டமன்றத் தொகுதி பாஜக வேட்பாளர் பால. பொன்கணபதி வேட்புமனு தாக்கல்: "பூர்வீக பந்தம் எனக்குண்டு" என நெகிழ்ச்சி

மானாமதுரை ஏப்.07-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் பால. பொன்கணபதி, நேற்று தனது வேட்புமனுவைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்தார்.



வேட்புமனுத் தாக்கலுக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்தொகுதியுடன் தனக்கிருக்கும் ஆழமான பூர்வீகத் தொடர்புகளைக் குறித்து விரிவாகப் பேசினார். பூர்வீகத் தொடர்பும் பாசமும் "எதிரணி வேட்பாளர் தன்னை ஒரு உள்ளூர் ஆளாகக் காட்டிக்கொள்ளலாம், ஆனால் இந்த மண்ணுடனான உண்மையான பூர்வீக பந்தம் எனக்கே அதிகம்," என்று குறிப்பிட்ட பால. பொன்கணபதி, தான் முதலாம் வகுப்பு படித்தது முதல் தனது தாயார் இத்தொகுதியின் பல்வேறு பகுதிகளில் ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியது வரையிலான நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார். குறிப்பாகத் தாயமங்கலம், நகரகொடி, அரணையூர் மற்றும் இடையவளசை போன்ற ஊர்களில் வாழ்ந்த அனுபவங்கள் தனக்கு இந்த மண்ணின் மக்களின் மனநிலையை நன்கு புரிய வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சிப் பணிகளில் அக்கறை கடந்த காலங்களில் இத்தொகுதியில் மக்கள் பிரதிநிதியாக இருந்தவர்கள் செய்த தவறுகளையும், நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

* மானாமதுரை மக்களின் நலனுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பயோ மெடிக்கல் கழிவு ஆலை விவகாரத்தில் மக்களின் எதிர்ப்பு நியாயமானது. * கடந்த ஐந்து ஆண்டுகளில் தொகுதிக்கு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்தீர்கள்? எனச் சவால் விடுத்த அவர், மேம்பாலம் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளில் இத்தொகுதி பின்தங்கியுள்ளதைக் கண்டித்தார்.

வெற்றி நிச்சயம் என்.டி.ஏ கூட்டணி நம்பிக்கை

பேட்டியின் போது உடன் இருந்த பாஜக மூத்த தலைவர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அரசின் திட்டங்களும், எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகபாஜக கூட்டணியின் பலமும் தங்களுக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தரும் என நம்பிக்கை தெரிவித்தனர்.

"திமுக மற்றும் காங்கிரஸ் கூட்டணி பரப்பும் பொய் பிரச்சாரங்களை மக்கள் நம்ப மாட்டார்கள். இத்தொகுதியில் பாஜக வேட்பாளர் பால. பொன்கணபதி மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதி," என அவர்கள் சூளுரைத்தனர்.

வேட்புமனுத் தாக்கலின் போது முன்னாள் அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் குணசேகரன்,நாகராஜன், மற்றும் மாவட்டத் தலைவர் உள்ளிட்ட திரளான கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161